Thalaivaasal
தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 15 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஒக்ரோபர் 12, 2020

## வைத்தியர்கள் மூவருக்கு கொரோனா

இனங் காணப் பட்ட கொரோனா தொற்றாளர் களுக்கிடையில் மூன்று வைத் தியர்கள் உள்ளடங்குளவதாக

03

## முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் குமணன், தவசீலன் மீது தாக்குதல்





முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முறிப்புக் கிராமத்தில் மாபியாக்கள் போல செயற்படும் நான்கு பேர் கொண்ட வன்முறைக் குழு ஒன்று, ஊடகவியலாளர்கள் இருவரை கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியதுடன் அவர்களிடம் இருந்த ஊடக உபகரணங்களையும் அபகரித்த சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது,

முறிப்பு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தலைமையிலான குறித்த குழு சட்டவிரோத மரக்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது. அந்தப் பகுதியில் காணப்படுகின்ற தேக்கு மற்றும் முதிரை மரங்களைக் கடத்தும் நடவடிக்கையை வழமையாகக் கொண்டு

03



## மைத்திரியிடம் ஆறு மணி நேரம் விசாரணை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் 2 ஆவது நாளாக இன்று (12) ஆஜரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆறு மணித்தியாலங்கள் சாட்சியம் வழங்கியதன் பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

மீண்டும் அவரை ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

03

# அடுத்துவரும் 5 நாட்கள் அபாயகரமானவை

### இராணுவத் தளபதி எச்சரிக்கை



இலங்கையில் அடுத்து வரும் 5 நாட்களில் ஹம்பா – மினுவாங்கொட ஆடை தொழிற்சாலை கொரோனா கொத்தணியை போன்றே மற்றொரு கொரோனா கொத்தணி ஆபத்து வர வுள்ளதாக இராணுவத் தளபதியும், கொரோனா

03



## ஆனந்தசங்கரி நலமாக உள்ளார்


தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி (87 வயது) திடீர் சுகயீனம் காரணமாக வெள்ளவத்தை தனியார் வைத்திசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக வெளியான செய்திகளை அவரது பெறாமகன் மறுத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்

03

## மின்சார நிறுவனத்தில் 12 பேருக்கு கொரோனா

கந்தானை இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தில் கடமையாற்றி வரும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுறுதியாகியுள்ளதாக ஜா-எல பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.



குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் மகள் மினுவங்கொட பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் நிலையில், அவர் தற்போது தனிமைப்படுத்தில் மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கந்தானை இலங்கை மின்சார (தனியார்) நிறுவன பணி

03

## இன்று 90 பேருக்கு கொரோனா தொற்று

இன்று நண்பகல்வரை 39 பேர் கொரேனா தொற்றோளர்கள் அடையாளங்காணப்பட்டிருந்த நிலையில் இன்று பிற்பகல் மேலும் 51 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி, இன்றைய நாளில் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆக உயர்ந்துள்ளது.

இன்று அடையாளம் காணப்பட்ட 51 பேரில், மினுவங்கோகொட ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களின்

03



## வடமராட்சியில் இரு தனியார் கல்வி நிலையங்களுக்கு பூட்டு

யாழ்.வடமராட்சி கரணவாய், மற்றும் வதிரி பகுதிகளில் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை மீறி இயங்கிவந்த தனியார் கல்வி நிலையங்கள் இரண்டு இன்று சீல் வைக்கப்பட்டிருக்கின்றது.

கொரோனா பரவல் அதிகரித்தலையடுத்து இலங்கை அரசாங்கத்தினால் தனியார் கல்வி நிலையங்களை மீள் அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலைக் கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தமை தொடர்பிலேயே இந்த கல்வி நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச வைத்தியரின் அறிவுறுத்தலுக்கு அமைய

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# ஆளுநர் அலுவலகம் முன்பாக இரு வேறு போராட்டங்கள்




வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக, இன்று (12) காலை இரு வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சாரதிகள் விடயத்தில் அரசியல் தலையீடுகள் புகுத்தப்படுவதாக எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கு மாகாண சாரதிகளாலும், யாழ். மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பழக்கடைகளை அகற்றுமாறு யாழ்பாண மாநகர சபைால் விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுக்கு எதிராக யாழ். நகர வர்த்தகர்களாலும், இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

போராட்டங்களின் நிறைவில், ஆளுநரின் செயலாளரிடம் வடக்கு மாகாண சாரதிகள் மகஜரொன்று கையளித்ததுடன், யாழ். நகர வர்த்தகர்களால் ஆளுநரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டுள்ளன.

## கொரோனாவிலிருந்து 10 பேர் பூரண குணம்

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்தவர்களில் மேலும் 10 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3,317 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக



சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மக்களுக்கு பிரதேச செயலாளரின் விசேட அறிவிப்பு




கொரோனா வைரஸ் தொற்று பரவல் எமது பிரதேசங்களிலும் பரவிக் கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமையினால் மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதில் கவனம் செலுத்த வேண்டுமென பிரதேசச் செயலாளர் எஸ்.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளமை தொடர்பாக கருத்து தெரவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக எஸ். பிரதீபன் மேலும் கூறியுள்ளதாவது,

“கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மையும் ஏனையோரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின் சுகாதார நடைமுறைகளை மக்கள்பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும், அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியே செல்வதுடன் அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமானதாகும்.

கைகளை சவர்க்காரமிட்டு கழுவுவதுடன் தொற்று நீக்கி மூலம் சுத்தப்படுத்தவும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் இருவருக்கிடையே குறைந்தது 1 மீற்றர் இடைவெளியை பேணவும், தற்போதைய சூழ்நிலையில் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பது சிறந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்தோர் குறிப்பாக கொழும்பு, கம்பஹா மற்றும் பத்தளம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மண்ணாரிற்கு வருகை தந்தோர் சுகாதார பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவுடன் வாழப் பழகுங்கள்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் முழு உலகிலும் காணப்படுவதாகவும் அதனை இலங்கையில் மாத்திரம் கட்டுப்படுத்தி முழுமையாக ஒழிக்க முடியாது என பிரதம தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய சூழலில் நாம் கொரோனா வைரஸ் (கொவிட் 19) உடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் (கொவிட் 19) ஒரு உலகளாவிய தொற்றுநோய். அதன் பரவல் இன்று அல்லது நாளை முடிவடையாது. இலங்கையில் மட்டும் இதனை கட்டுப்படுத்தி சுதந்திரமாக இருக்க முடியாது. எனவே, கொவிட் - 19 தொற்று நோய் உலகத்தில் இருந்து ஒழிக்கப்படும் வரை நாம் கொவிட் 19 உடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும். முழுமையான ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து சமூக செயற்பாட்டை இடைக்கிடையே நிறுத்துவதன் ஊடாக அதனை கட்டுப்படுத்த முடியாது. கொவிட் -19 நோயைக் கட்டுப்படுத்துவது முக்கியம், அதே நேரத்தில் சாதாரண வாழ்க்கையை வாழ வேண்டியதும் அவசியம். உயர்தர பரீட்சைகள் சுமார் 1 மாத காலத்துக்கு நடைபெறும். எனவே, அதற்கு எந்த வித இடையூறும் இல்லாமல் செயற்படுவதை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் பொறுப்புடன் உறுதிப்படுத்த வேண்டும். தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு பரீட்சை எழுத விசேட வசதிகள் செய்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, கொவிட் -19 அச்சுறுத்தல் காணப்பட்டாலும் மாணவர்கள் தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு பரீட்சையை எதிர்கொண்டு வெற்றி பெறுவது சவால் மிக்கது” என்றார்.





## வீட்டினுள் கிடந்த சடலம் மீட்பு

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹட்டன், ஹிஜ்ஜிராபுர பகுதியில் வீட்டினுள் இறந்த கிடந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று (12) திகதி மீட்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் வழங்கி தகவலினை அடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்டவர் பலணியாண்டி வயது 60 மதிக்க தக்கவர் என்றும் இவர் ஒரு முச்சக்கரவண்டி சாரதி என்றும இவர் மூன்று நாளுக்கு முன் இறந்து இருக்கலாம் என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளன.

# இந்திய இராணுவத்தின் படுகொலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம் கொக்குவிலில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு தினம் பிரம்படி பகுதியில் இன்று காலை அனுஸ்டிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தினரால் கொக்குவில் பிரம்படி பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 34ஆம் ஆண்டு நினைவஞ்சலி இன்று காலை நினைவு தூபியில் நினைவு கூரப்பட்டது.

குறித்த நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து ஈகை சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளர் ஜெயகரன், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்: யாழ். ஊடக அமையம் கண்டனம்

முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்ட விரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களும் யாழ்.ஊடக அமைய சிரேஸ்ட உறுப்பினர்களுமான சண்முகம் தவசீலன் மற்றும் கணபதிப்பிள்ளை குமணன் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையினை யாழ்.ஊடக அமையம் வன்மையாக கண்டிக்கின்றது.

அதே வேளை மீண்டும் அரங்கேறும் ஊடக வன்முறை தொடர்பில் தனது அச்சத்தை யாழ். ஊடக அமையம் இவ்வேளையில் பகிர்ந்தும் கொள்கின்றது.

ஏற்கனவே வடகிழக்கில் ஊடக சுதந்திரம் கடந்த காலங்களில் எவ்வாறு அரசினால் பேணப்பட்டதென்பது சொல்லி தெரியவேண்டியதொன்றல்ல.

எமது சக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் 39பேரினது உயிர்களை ஈகம் செய்தே தமிழ் தேசத்தில் ஊடக பணி முன்னெடுக்கப்படுகின்றது.

ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டும், விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களால் ஊடகவியலாளர்கள் பலரும் நாட்டை விட்டு வெளியேறும் சூழலே முன்னைய காலங்களில் இருந்து வந்திருந்தது.

ஊடகப்படுகொலைகளிற்கு யுத்த காலத்தை காரணங்காட்டி வந்திருந்த ஆட்சியாளர்களிற்கும் அவர்களது முகவர்களிற்கும் முல்லைத்தீவு முறிப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் தேக்கு மரங்கள் வெட்டப்படுவது யுத்த கால சூழல் இல்லையென்பது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை.

தாக்குதல் நடத்தியவர்கள் இலங்கை வன வள திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸாரின் ஆதரவுடனேயே இந்த மரக்கடத்தலில் ஈடுபட்டதை தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் உறுதியாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை தேசிய மரக்கூட்டுத்தாபனம் ஒன்றின் உப ஒப்பந்த தாரராகிய பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த நபரொருவரது நிறுவனம் ஒன்றுக்கான மரம் ஏற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுவரும் குறித்த குழு தமக்கு காப்பரணாக குறித்த நிறுவத்தினையும் மரக் கூட்டுத்தாபனத்தினையும் பயன்படுத்தி வந்திருக்கின்றதென்பதையும் ஊடக வியலாளர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

மீண்டும் ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரச இயந்திர ஆதரவுடனான தாக்குதல்கள் நிச்சயமாக மகிழ்ச்சியான சூழலொன்றை எதிர்வருங்காலங்களில் நிச்சயம் ஏற்படுத்தாதென்பதை யாழ். ஊடக அமையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்யவும் சட்டத்தின் முன்னிறுத்தவும் யாழ். ஊடக அமையம் அரசை கேட்டுக் கொள்வதுடன் ஊடக சுதந்திரத்திற்கான பயணத்தில் உறுதியாக அனைத்து ஊடகவியலாளர்களுடனும் கைகோர்த்து பயணிக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றதென யாழ். ஊடக அமையம் விடுத்த செய்தி குறிப்பில் தெரிவத்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அடுத்துவரும்...

எதிர்ப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கான செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், முதல் சுற்றில் மக்கள் உட்பட பலர் கொரோனாவின் கட்டுப்பாட்டை மிகைப்படுத்தியதாகவும், இந்த நிலைமை மற்றொரு அலைக்கு வழிவகுத்தது எனவும்

எதிர்வரும் ஐந்து நாட்களில் நாடளாவிய ரீதியாக கொரோனா தொற்றாளர்கள் அதிகமானோர் இனங்காணப்படலாம். ஏதோ ஒரு இடத்தில் சிறிய தவறு அல்லது அலட்சியம் ஏற்பட்டுள்ளது. கட்டுநாயக்கவை அடிப்படையாக கொண்டு மற்றுமொரு கொரோனா கொத்தணி ஏற்படும் ஆபத்து உள்ளது.

அந்த ஆபத்து நாட்டின் எந்தவொரு பகுதியிலும் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படகூடும். இம்முறை, முதல் முறை போன்று கொரோனாவை கட்டுப்படுத்துவதும் அல்லது கட்டுப்படுத்தாமல் இருப்பதற்கும் மக்களின் செயற்பாடே தீர்மானிக்கவுள்ளது.

மக்கள் வழங்கும் ஆதரவிற்கமைய கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். எனத் தெரிவித்துள்ளார்.

### முல்லைத்தீவு...

செயற்படும் அந்தக்குழு அடிதடி வன்முறையில் ஈடுபட்டுவரும் வழக்கத்தையும் கொண்டிருந்துள்ளது.

இலங்கை தேசிய மரக்கூட்டுத்தாபனம் ஒன்றின் உப ஒப்பந்ததாரராகிய பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கான மரம் ஏற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுவரும் குறித்த குழு, தமக்கு காப்பரணாக குறித்த நிறுவத்தினையும் மரக்கூட்டுத்தாபனத்தினையும் பயன்படுத்தி வந்திருக்கின்றது.

நீண்டகாலமாக குறித்த மரக்கடத்தல் தொடர்பில் குமுழமுனை மற்றும் முறிப்பு பகுதி மக்களால் பொறுப்புவாய்ந்த தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

அந்தக் குழுவுக்கு தலைமை தாங்கும் நபர் தேக்கு மரத்தினாலான மரவீடு ஒன்றை அமைத்துவருவதாகவும் அதனையாவது வெளியில் கொண்டுவருமாறும் முறிப்பு மற்றும் குமுழமுனை மக்கள் ஊடகவியலாளர்கள் தவசீலன் மற்றும் குமணன் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இதனை அடுத்து சற்று முன்னர் அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் இருவரும் சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்ப முற்பட்டபோது குறித்த நபரும் அவருடைய கையாட்கள் மூவரும் வாச்சி, கொட்டன் தடிகள், இரும்புக்கம்பிகளால் இருவரையும் கடுமையாகத் தாக்கி பணயக் கைதிகளாக்கியிருக்கின்றனர்.

பின்னர் ஊடகவியலாளர்களின் தொலைபேசி மற்றும் கமெராக்களில் இருந்த காட்சிப் பதிவுகளை அழிக்கவைத்ததுடன், அவர்களிடம் இருந்த ஊடக உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களையும் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் என்பவற்றையும் கொள்ளையிட்டிருக்கின்றனர்.

ஊடகவியலாளர்கள் இருவரையும் திருடர்கள் என்று தெரிவுக்குமாறு நிர்ப்பந்தித்து விடியோவாகவும் தமது கமெராக்களில் பதிவு செய்திருக்கின்றனர்.

அதன் பின்னரே அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஊடகவியலாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த தாக்குலாளிகளுக்கு அதிகாரத் தரப்புடன் நெருக்கமான உறவுகள் இருப்பதாகவும் தமக்கு நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை இல்லை என்றும் முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

### வைத்தியர்கள்...

இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கேகாலை வைத்தியசாலையின் வைத்தியர்கள் மூவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளனதாக அவர் தெரிவித்துள்ளார்.

மினுவங்கொட கொரோனா கொத்தணியில் இதுவரையில் கொரோனா தொற்றுக்கு உள்ளனவர்களின் எண்ணிக்கை 1,307 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களுள் 1036 பேர் மினுவங்கொட ஆடை கைத்தொழிற்சாலையை சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 6 தினங்களில் மாத்திரம் 24,878 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அதனடிப்படையில் நாளொன்றுக்கு சுமார் 5000 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மின்சார...

யாளர்கள் 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சிஆர் பரிசோதனைகளில், 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஜா-எல பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஆனந்தசங்கரி...

வீ.ஆனந்தசங்கரி வழமையான மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றிருந்ததாகத் தெரிவித்த அவர் தனது பெரியதந்தை நலமுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

### மைத்திரியிடம்...

இதற்கு முன்னர் அவர் கடந்த 5 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சியில்...

நெல்லியடி சுகாதார பரிசோதகரால் இத் தனியார் கல்வி நிறுவனங்கள் இரண்டிற்கும் சீல் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இன்று...

தொடர்பை பேணிய 36 பேர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களைச் சேர்ந்த 15 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இதனிடையே மினுவாங்கொட கொரோனா கொத்தணி தொற்று எண்ணிக்கை 1,397 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 10 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,317 ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் 13 மருத்துவமனைகளில் 1,512 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

# இலங்கை முழுவதும் பலத்த காற்றுக்கு சிவப்பு எச்சரிக்கை

இலங்கை முழுவதும் பலத்த காற்று வீசுமென சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக அத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் வேளையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# 7 துப்பாக்கி தொழிற்சாலை முற்றுகை!

## முன்னாள் போராளி உட்பட மூவர் கைது



அம்பாறை- திருக்கோவில் பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோத துப்பாக்கி தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை, தேசிய புலனாய்வு பிரிவினர் முற்றுகையிட்டு, துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3பேரை கைது செய்த தேசிய புலனாய்வு பிரிவினர், 10 துப்பாக்கிகளை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேசிய புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திருக்கோவில் பிரதான வீதியிலுள்ள அம்மன்கோயிலுக்கு முன்னால் இயங்கிவரும், லேத் மெசின் கடையினை முற்றுகையிட்டனர். அங்குதிரட்வகை உள்ளூர் துப்பாக்கி தயாரிப்பில் ஈடுபட்டு வந்த 60 வயதுடைய தம்பிலுவிலைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தனர்

இதனையடுத்து குறித்த துப்பாக்கி தயாரிப்பான பட் எனப்படும் பாகமான துப்பாக்கியின் மரத்திலான பிடியை தயாரித்து வந்த, தச்சு தொழிலாழியான தம்பிலுவிலைச் சேர்ந்த 40 வயதுடைய முன்னாள் போராளியான ஒருவரையும், தயாரிக்கப்படும் துப்பாக்கிகளை விற்பனை செய்து வந்த காஞ்சரம் குடாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3பேரை கைது செய்ததுடன் அங்கிருந்து தயாரிக்கப்பட்ட 10 துப்பாக்கிகளையும் மீட்டனர்

இதில் கைது செய்யப்பட்டவர்களை திருக்கோவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையில் சமூக தொற்றாக மாறியதா கொரோனா?

இலங்கையில் தற்போது காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றானது சமூகத்திற்குள் பரவவில்லை என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்கள் அனைவரும் மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பை பேணியவர்கள் மாத்திரமே என அந்தப் பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் தனியார் மருத்துவமனைகளில் எந்தவொரு நபருக்கும் பிசிஆர் பரிசோதனைகளை செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பணத்தாள்களிலும் தொலைபேசிகளின் திரைகளிலும் பரவும் கொரோனா



கொரோனா வைரஸ் தொற்று பணத்தாள்களிலும்தொலைபேசிகளின் திரைகளிலும் 28 நாட்கள் வரை இருக்குமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் எதிர்பார்த்ததை விடவும் அதிக காலம் வாழ்வதாக அவுஸ்ரேலியாவின் தேசிய விஞ்ஞான நிறுவகம் முன்னெடுத்த ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

எனினும் இந்த பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ள தொலைபேசியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இருமல் மற்றும் பேசுகின்ற போதும் வைரஸ் வெகுவாக பரவுவதாக வைத்தியர்கள் தெரிவத்துள்ளனர்.

அத்துடன் உலோகம் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் ஊடாக வைரஸ் பரவக்கூடுமெனவும் கண்டறியப்பட்டுள்ளது.



# 3.கொரோனா பரவலுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பம்

கொரோனா பரவலுக்கு மத்தியில் சுகாதார பாதுகாப்புடன் இன்று (திங்கட்கிழமை) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளது.

இந்த பரீட்சைகள் இன்று முதல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இம்முறை 3 இலட்சத்து 62 ஆயிரத்து 824 பரீட்சாத்திகள் உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களில் 3 இலட்சத்து 19 ஆயிரத்து 485 பேர் புதிய பாடத்திட்டத்திலும் 43 ஆயிரத்து 339 பேர் பழைய பாட திட்டத்திலும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

புதிய பாடத்திட்டத்தில் 2 இலட்சத்து 77 ஆயிரத்து 580 பேர் பாடசாலை மூல பரீட்சாத்திகளாவர். எஞ்சிய 41 ஆயிரத்து 905 பேர் தனியார் பரீட்சாத்திகளாவர்.

உயர்தர பரீட்சைகளுக்காக நாடளாவிய ரீதியில் 2648 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, 316 ஒருங்கிணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், நேற்று ஞாயிற்றுக் கிழமை தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா ஒருவரிலிருந்து 522 பேருக்கு பரவும் ஆபத்து



இலங்கையின் பல இடங்களில் கொரோனா தொற்று பரவி வரும் நிலையில், ஒருவரிலிருந்து 522 பேருக்கு தொற்று பரவும் ஆபத்து உள்ளதாக இராணுவதளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிவரும் கொரோனா அச்சம் காரணமாக பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து நாட்டு மக்களுக்கு கருத்து வெளியிடும்போதே இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மினுவாங்கொடை கொவிட் கொத்தணியின் முதலாவது முதல் இரண்டாவது தொற்றாளர் வரையில் பரவிய விதம் தொடர்பில் கண்காணிக்கப்பட்டது.

முதலாவது கொரோனா தொற்றாளர் தொடர்பில் இதுவரையில் இனங்காணப்படவில்லை. தற்போதைய தகவல்களுக்கு அமைய கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் குறித்த ஆடைத்தொழிற்சாலையில் இருந்து சிலர் சுகவீனமுற்று இருந்ததாக தெரிய வந்துள்ளது

நேற்றை தினம் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுள் 26 பேர் மினுவாங்கொடை பகுதியையும் 23 பேர் கம்பஹா பகுதியையும் மற்றும் 22 பேர் திவுலுபிட்டிய பகுதியையும் சேர்ந்தவர்கள்.

அத்துடன் கொழும்பில்இருவர், மாத்தளையில்ஒருவர், பொலன்னறுவையில் இருவர் மற்றும் பாணந்துறையில் ஒருவர் என பல்வேறு பகுதிகளில் இருந்து குறைந்தது ஒருவரேனும் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

அத்தோடு, ஒருவரிலிருந்து 522 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படலாம். வைரஸ் சமூகமயப் படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் உறுதியாக கூற முடியாது. மக்கள் நடந்து கொள்ளும் விதத்திலேயே வைரஸ் சமூகமயப்படுவது தங்கியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.